**செ. கு. எண்: 022** **நாள்: 26.02.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.2.2017

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாவாடை என்பவரின் மகன் திரு. சந்திரகாசன்;

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த திரு. பிச்சை என்பவரின் மகன் திரு. முனியசாமி;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சட்ராஸ்குப்பம் கிராமம், ஊத்துக்காட்டு அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் திரு. பாஸ்கரன்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயபால் என்பவரின் மகன் திரு. பிரதாப்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமத்தைச் சேர்ந்த திரு. சூசை என்பவரின் மகன் திரு. அந்தோணிசாமி;

நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த திரு இருசப்பன் என்பவரின் மகன் திரு முருகானந்தம்;

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பொம்மையார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு ராஜகோபால் என்பவரின் மகன் திரு ராமலிங்கம்;

கடலூர் மாவட்டம், கடலூர் முதுநகர், அக்கரைகோரி முகத்துவாரப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற திரு ஆறுமுகம் என்வரின் மகன் திரு குணசேகரன்;

ஆகிய எட்டு மீனவர்கள் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தனர்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிழந்த மேற்கண்ட எட்டு மீனவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**